**TNTT070011442026**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி**

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் நாள் திங்கட்கிழமை

**முதல் நிலை வழக்கு எண்.47/2026**

**கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண். 56/2026**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கோவில்பட்டி மேற்கு காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| -எதிர்- | | |
| 1.விஜயபாண்டி - 20/2026<br>த/பெ. கோட்டிமுத்து,<br>3-79, காளியம்மன் கோவில் தெரு,<br>அய்யனேரி,<br>கோவில்பட்டி.<br><br>2. மகேஷ்வரன் - 22/26,<br>த/பெ. மாரிமுத்து,<br>3-99, காளியம்மன் கோவில் தெரு,<br>அய்யனேரி,<br>கோவில்பட்டி.<br><br>3. பட்டமுத்து - 28/26,<br>த/பெ. இசக்கி,<br>1-பி, வீரவாஞ்சி நகர் 3 வது தெரு,<br>அருகில் சங்கரேஸ்வரி கோவில்,<br>கோவில்பட்டி.<br><br>4. மகேந்திரன், 21/26,<br>த/பெ. கருப்பசாமி,<br>வீரவாஞ்சி நகர் 1 வது தெரு,<br>கோவில்பட்டி.<br><br>5. தமிழ்செல்வன், 31/26, | : | எதிரிகள் |

| | | |
|---|---|---|
| த/பெ. தியாகராஜன்,<br>37 இ, கதிரேசன் கோவில் தெரு,<br>கோவில்பட்டி. | | |

இவ்வழக்கானது 19.02.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 47/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3 வது எதிரி தரப்பில் எதிரியே ஆஜராகியும், 1, 2, 4, 5 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

**1. அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :–**

இவ்வழக்கில் கடந்த 14.01.2026ம் தேதி காலை 06.00 மணிக்கு அய்யனேரி பொன் இருளப்பசாமி கோவில் அருகில் வைத்து கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் சாட்சி1 திரு. செந்தில்குமார் மற்றும் சாட்சி2 தலைமை காவலர் 273 திரு. கனகராஜ், சாட்சி3 தலைமை காவலர் 5072 திரு. பாரதிகண்ணன், சாட்சி4 மு.நி.கா 2579 திரு. முத்துப்பாண்டியன், சாட்சி5 காவலர் 5125 திரு. கிங்ஸி ஆகியோர்களை பார்த்து 1 முதல் 5 வரையான எதிரிகள் இந்த போலீசு புண்ட மவன்களுக்கு வேற வேலையே இல்லையா நாம பெரிய ரவுடியாகலாம்னு நினச்சா விடமாட்டானுங்க என்று பொதுயிடத்தில் வைத்து அசிங்கமாக பேசியும் 1வது எதிரி விஜயபாண்டி பொதுமக்களுக்கு இடையூறாகவும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாகவும் இந்திய படைக்கல சட்டத்தின் கீழ் கொடுரமான கூர்மையான மனித உயிருக்கு ஆபத்தான 9 அங்குலத்திற்கும் அதிகமான நீளம் உள்ள 2 அங்குலத்திற்கு அதிகமான அகலம் கொண்ட ஆயுதமான பெரிய அருவாளை கையில் வைத்துகொண்டு எங்களை எவனாவது பிடிக்க வந்தால் கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தும் பொது ஊழியரைத் தனது சட்டப்படியான கடமைகளை செய்யவிடாமல் தடுத்தும் கேடு விளைவிப்பதாக மிரட்டல் விடுத்து தள்ளி தாக்கிவிட்டு தப்பி ஓட முயற்சித்தக் குற்றத்திற்காக 1 முதல் 3 வரையிலான எதிரிகளின் மீது பிரிவுகள் 3(5), 293, 296(b), 132, 224, 351(3) BNS & 25 (1A) Arms Act ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனதும் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்தபோது எதிரிகளுக்கு எதிராக **பிரிவுகள்** 3(5), 293, 296(b), 132, 224, 351(3) BNS & 25 (1A) Arms Act**–ன் கீழ்** குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண். 16/2026 இவ்வழக்கின் சொத்துகளை பிரிவு 232(c)BNSS–ன் படி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d) BNSS–ன் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் 03.08.2025 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 3வது ஆஜர்படுத்த வேண்டும் என்றும், 1, 2, 4, 5 ஆஜராகும்படியும் உத்தரவிடப்படுகிறது.

7. எதிரிகள் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்கள்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜுலை 20-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)...M. மணி மேகலா/20.07.2026
நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.